# மலாயாப் பல்கலைக்கழக இந்திய ஆய்வியல் துறை மாணவர்களின் கற்றல் நடவடிக்கையில் சமூக ஊடகங்களின் விளைவுகள்

# The Impact of Social Media on Learning Activities Among Students in Department of Indian Studies, University of Malaya

**லலிதாம்பிகை நடராஜா** / Lalithambikai Nadarajah[1]

**இரா. சீதா லட்சுமி** / R. Seeta Lechumi Ratha Krishnan[2]

**Abstract**

This research *"The Impact of Social Media on Learning Activities among Students in Department of Indian Studies, University of Malaya"*, investigates how students use social media for academic purposes and its influence on their learning. The research aims to identify the most frequently used platforms, examine usage patterns, and determine the impact on academic performance. Driven by the increasing role of digital tools in education, a quantitative research method was applied using a structured survey distributed among students. Data were analyzed using Jamovi software. The study is grounded in the Uses and Gratifications Theory (UGT), which helps explain how students actively choose social media to fulfill academic and social needs. Key findings revealed popular platforms such as WhatsApp and Instagram supported academic communication, while overuse caused distraction and time mismanagement. The research achieved its objectives and offers practical insights to enhance students' learning engagement through balanced and mindful social media use.

Date of submission: 2025-05-30
Date of acceptance: 2025-06-15
Date of Publication: 2025-07-23
Corresponding author's Name:
R. Seeta Lechumi Ratha Krishnan
Email: rseeta@um.edu.my

**Keywords:** Social Media, Learning Activities, Indian Studies Students, Digital Communication, implication of thechnology

## முன்னுரை

இன்றைய நவீன உலகில் சமூக ஊடகங்கள் மனித வாழ்க்கையின் இன்றியமையாத அங்கமாக மாறிவிட்டன (Kaplan & Haenlein, 2010). சமூக ஊடகம் என்பது இணையத்தை அடிப்படையாகக் கொண்ட செயற்பாடாகும். இது கருத்தியல் மற்றும் தொழில்நுட்ப கட்டமைப்பு செய்யும் ஊடகமாகச் செயல்படுகிறது. கணினி மற்றும் ஸ்மார்ட் தொலைபேசிகள் மூலம் தனிநபர் மற்றொருவருடன் தொடர்புகொள்வதற்காக உருவாக்கப்பட்ட வலையமைப்புகள் மூலம் தொடர்பாடல் இடம்பெறுகிறது. முகநூல்,

[1]The Author, is an Undergraduate Student in the Department of Indian Studies, University Malaya, Kuala Lumpur, 22003686@siswa.um.edu.my

[2]The Correspondence Author, is a Senior Lecturer in the Department of Indian Studies, University Malaya, Kuala Lumpur, rseeta@um.edu.my

கீச்சகம், படவரி, லிங்ட் இன், புலனம், வலையொளி போன்ற தளங்கள் 2000-ஆம் ஆண்டுக்குப் பிற்பட்ட காலத்தில் உருவாக்கப்பட்டு மிகக் குறுகிய காலத்தில் பிரபலமடைந்துவிட்டன (Heyam, 2014). சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவதில் இளைஞர்கள் முன்னிலையில் உள்ளனர் (Gikas & Grant, 2013).

தற்கால மின்னியல் யுகத்தில் சமூக ஊடகங்கள் வெறும் சமூக வலைதளப் பயன்பாட்டுக் கருவியிலிருந்து, கல்வியையும் பாதிக்கக்கூடிய பல பரிமாண ஊடகமாக மாறிவிட்டது (Chen & Bryer, 2012). உயர்கல்வியில் பல்கலைக்கழக மாணவர்கள் சமூக தொடர்புகளுக்காக மட்டுமல்லாமல், கற்றல் நடவடிக்கைகளுக்கும் இப்பயன்பாட்டை அதிகமாகக் கையாள்கின்றனர் (Junco, 2012; Manca & Ranieri, 2016). சமூக ஊடகங்கள் மாணவர்களுக்குக் கல்வி விவாதங்களில் பங்கேற்க, தகவல்களை அணுக, கல்வி திட்டங்களில் நேரடியாக இணைந்து செயல்படுவதற்கு உதவுகின்றன (Junco, Heiberger, & Loken, 2011).

எனினும், சமூக ஊடகங்களை அளவுக்கு மீறிய அல்லது தவறான முறையில் பயன்படுத்துவதால் கல்வி நடவடிக்கையில் எவ்வாறு பாதிக்கப்படுகிறது என்ற கேள்வி எழுந்துள்ளது (Chen & Bryer, 2012). இவ்ஆய்வு மலாயாப் பல்கலைக்கழக இந்திய ஆய்வியல் துறை மாணவர்களிடையே சமூக ஊடக பயன்பாடு மற்றும் கற்றல் நடவடிக்கை ஆகியவற்றுக்கு இடையேயுள்ள தொடர்பை ஆராய்கிறது.

### ஆய்வுச் சிக்கல்

21-ஆம் நூற்றாண்டில் சமூக ஊடகங்கள் உலகளாவிய அளவில் தகவல் தொடர்பு மற்றும் கல்வித் துறையில் புரட்சிகரமான மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன (Heyam, 2014). முகநூல், படவரி, கீச்சகம், புலனம் போன்ற சமூக ஊடக தளங்கள் இன்று பல்கலைக்கழக மாணவர்களின் அன்றாட வாழ்க்கையின் பிரிக்க முடியாதப் பகுதியாக மாறியுள்ளன.

மலாயாப் பல்கலைக்கழக இந்திய ஆய்வியல் துறை மாணவர்கள் சமூக ஊடகங்களைக் கற்றல் நடவடிக்கைகளில் பல்வேறு வழிகளில் பயன்படுத்துகின்றனர். இவர்கள் கல்வித் தகவல்களைப் பரிமாற்றம் செய்தல், வகுப்பு விவாதங்களில் பங்கேற்பது, குழு ஆய்வுகளை ஒருங்கிணைத்தல், கல்வி வளங்களை அணுகுதல் ஆகிய செயல்பாடுகளுக்குச் சமூக ஊடகங்களைப் பயன்படுத்துகின்றனர் (Gikas & Grant, 2013).

எனினும், சமூக ஊடகங்களின் பயன்பாடு மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளில் முரண்பாடான விளைவுகளை ஏற்படுத்துவதாக பல்வேறு ஆய்வுகள் தெரிவிக்கின்றன (Chen & Bryer, 2012; Manca & Ranieri, 2016). ஒருபுறம் சமூக ஊடகங்கள் கல்வி ஒத்துழைப்பு (collaboration), தகவல் அணுகல், படைப்பாற்றல் வளர்ச்சி ஆகியவற்றில் நேர்மறையான பங்கு வகிக்கின்றன (Kuh, 2001; Junco et al., 2011). மறுபுறம், கவனச் சிதறல், நேர விரயம், கல்வி செயல்திறன் குறைவு ஆகிய எதிர்மறையான பாதிப்புகளும் ஏற்படுத்துவதாகக் கூறப்படுகிறது (Chen & Bryer, 2012).

இந்திய ஆய்வியல் துறை மாணவர்களின் சமூக ஊடக பயன்பாட்டு முறைகள் மற்றும் அதன் கற்றல் நடவடிக்கைகளில் ஏற்படுத்தும் விளைவுகள் குறித்துப் போதுமான ஆய்வுகள் நடத்தப்படவில்லை. குறிப்பாக, மலாயாப் பல்கலைக்கழகத்தின் இந்திய ஆய்வியல் துறையில் பயிலும் மாணவர்களின் சமூக ஊடக பயன்பாட்டின் தனித்துவமான பண்புகள், அவர்களின் கல்வி நிலைத்தன்மை மீதான தாக்கங்கள், மற்றும் திறம்பட சமூக ஊடகங்களைப் பயன்படுத்தி கற்றல் செயல்திறனை மேம்படுத்தும் வழிமுறைகள் குறித்த ஆழமான புரிதல் இல்லாதது முக்கியச் சிக்கலாக உள்ளது (Ruggiero, 2000). மேலும், வெவ்வேறு சமூக ஊடகத் தளங்களின் பயன்பாட்டு வேறுபாடுகள், மாணவர்களின் சமூக ஊடக பயன்பாட்டு நோக்கங்கள் (கல்வி சார்ந்த அல்லது பொழுதுபோக்கிற்கான), மற்றும் இவற்றின் கற்றல் நடவடிக்கைகளில் ஏற்படுத்தும் வேறுபட்ட விளைவுகள் குறித்த தெளிவான புரிதல் இல்லாமை கல்வியாளர்கள் மற்றும் மாணவர்களுக்குச் சவாலாக உள்ளது (Junco, 2012; Gikas & Grant, 2013).

இக்குறைபாடுகள் காரணமாக, இந்திய

ஆய்வியல் துறை மாணவர்களின் சமூக ஊடகப் பயன்பாட்டை திறம்பட வழிநடத்துவதற்கான சரியான கல்விக் கொள்கைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் உருவாக்க முடியாத நிலை உள்ளது. எனவே, இவ்ஆய்வு மலாயாப் பல்கலைக்கழக இந்திய ஆய்வியல் துறை மாணவர்களின் சமூக ஊடக பயன்பாட்டு முறைகளையும், அதன் கற்றல் நடவடிக்கைகளில் ஏற்படுத்தும் விளைவுகளையும் ஆராய்ந்து, இந்த அறிவுக் குறைபாட்டை நிரப்புவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்த ஆய்வானது மூன்று நோக்கங்களை முன்னிருத்தி அமைக்கப்பட்டுள்ளது. அவையாவன:

1. மலாயாப் பல்கலைக்கழக இந்திய ஆய்வியல் துறை மாணவர்கள் அதிகமாகப் பயன்படுத்தும் சமூக ஊடகங்களை அடையாளம் காணுதல்.
2. மலாயாப் பல்கலைக்கழக இந்திய ஆய்வியல் துறை மாணவர்கள் சமூக ஊடகங்களை அணுகும் முறைகளை ஆராய்தல்.
3. மலாயாப் பல்கலைக்கழக இந்திய ஆய்வியல் துறை மாணவர்களின் கற்றல் நடவடிக்கையில் சமூக ஊடகங்களின் விளைவுகளைக் கண்டறிதல்.

### ஆய்வு முன்னோடிகள்

21-ஆம் நூற்றாண்டில் சமூக ஊடகங்கள் மிகவும் வேகமாக வளர்கின்ற இணைய பயன்பாடாகக் கருதப்படுகிறது. தொழில்நுட்ப முன்னேற்றத்தின் ஆதரவுடன் இவை மனித சமூகத்தை பெரிய அளவில் பாதித்துள்ளன (Heyam, 2014). சமூக ஊடகங்கள் 1997-இல் "SixDegrees" என்ற முதல் அங்கீகரிக்கப்பட்ட தளத்துடன் தொடங்கி, இன்று எண்ணற்ற வலைதளங்களாக விரிவடைந்துள்ளன.

கல்வித் துறையில் சமூக ஊடகங்களின் பங்கு குறிப்பிடத்தக்கது. Kaplan மற்றும் Haenlein (2010) சமூக ஊடகங்களை இணையத்தை அடிப்படையாகக் கொண்ட செயலிகள் என வரையறுத்துள்ளனர். இவை பயனர் உருவாக்கிய உள்ளடக்கத்தை பரிமாறவும் உருவாக்கவும் அனுமதிக்கின்றன. கல்வியில் இவை இணைப்புத்தன்மை, அறிவுப்பகிர்வு மற்றும் உலகளாவிய ஈடுபாட்டை மேம்படுத்தி, கூட்டாண்மை கற்றல் மற்றும் விமர்சன சிந்தனைக்குப் புதிய வாய்ப்புகளை வழங்குகின்றன (Junco, Heiberger, & Loken, 2011).

ஆனால் இவை கவனச்சிதறல், இணையதள மோசடி மற்றும் தனியுரிமை சிக்கல்கள் போன்ற சவால்களையும் உருவாக்குகின்றன (Chen & Bryer, 2012). கல்வி அமைப்புகளில் மாணவர் ஈடுபாட்டை மேம்படுத்துவதற்கு சமூக ஊடகங்கள் செயல்படுகின்றன, ஆனால் அவற்றின் பாதிப்பு கட்டுப்பாட்டுடன் இருக்க வேண்டும் (Kuh, 2001). இந்த இரட்டை தன்மை- பயன்கள் மற்றும் சவால்கள் கல்வியில் சமூக ஊடகங்களின் பங்கு குறித்த முழுமையான புரிதலின் தேவையை எடுத்துரைக்கிறது.

### இலக்கவியல் ஆய்வு (Quantitative Research)

இந்த ஆய்வானது இலக்கவியல் ஆய்வாக மேற்கொள்ளப்படுகின்றது. புள்ளியல் அல்லது இலக்கவியல் ஆய்வு என்பது எண்ணிக்கை மற்றும் அளவிடுவதன் அடிப்படையில் அமைவதாகும். இலக்கவியல் ஆய்வானது முக்கியமான பண்புகளை விளக்கும் வண்ணத்திலும், முடிவுகளை உருவாக்கும் முக்கிய வேறுபாடுகளையும் அளிக்கின்றது. மேலும், இலக்கவியல் ஆய்வின் தரவுகளை அளக்கவும், பல்வேறு கோணங்களில் கண்டுப்பிடிப்புகளை விளக்கவும், தரவுகளைச் சேகரிக்கவும், பகுப்பாய்வு செய்யவும், அளவிடத்தக்க தரவுகளை விளக்குவது போன்ற செயல்கள் யாவும் இலக்கவியல் ஆய்வின் நோக்கமாக கொண்டுள்ளது.

மலாயாப் பல்கலைக்கழக இந்திய ஆய்வியல் துறை மாணவர்களின் கற்றல் நடவடிக்கையில் சமூக ஊடகங்களின் விளைவுகள் என்னும் தலைப்பில் மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்வினைச் செய்து முடிப்பதற்கு வினாநிரல் முக்கியப் பங்கினை வகிக்கின்றது. இலக்கவியல் ஆய்வில் பயன்படுத்தப்படும் வினாநிரல் என்பது ஆய்விற்கான பங்கேற்பாளர்களிடம் கேட்கப்படும் கேள்விகள் யாவும் வினாநிரலின் வாயிலாக தரவுகளைச் சேகரிக்கப்படும் கருவியாகக் கண்டறியப்பட்டுள்ளது (Chen & Bryer, 2012).

பயன்பாடுகள் மற்றும் திருப்தி கோட்பாடு

ஓர் ஆய்வில் மிக முக்கியமாக பங்காற்றுவது கோட்பாடாகும். நிகழ்வுகளை விளக்கவும், கணிக்கவும், புரிந்துகொள்ளவும் கோட்பாடுகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. கோட்பாடு என்பது நடக்கின்ற சூழல் குறித்த சிந்தனையைக் குறிப்பிடுகின்றது; ஒரு குறிப்பிட்ட நிகழ்வை விளக்குவதற்காக உருவாக்கப்பட்ட கருத்துகள் கோட்பாடுகளுள் அடங்கிய ஓர் அமைப்பாகும். இக்கோட்பாடு 1970-களில் எலிஹூ காட்ஸ் (Elihu Katz), ஜே.ஜி. ப்ளம்லர் (Jay G. Blumler) மற்றும் மைக்கேல் குரேவிட்ச் (Michael Gurevitch) ஆகியோரால் முன்மொழியப்பட்டது. இக்கோட்பாடு ஊடகங்கள் பயனர்களுக்கு என்ன செய்கிறது என்பதற்கு பதிலாக, பயனர்கள் ஊடகங்களுடன் என்ன செய்கிறார்கள் என்பதில் கவனம் செலுத்துகிறது. இக்கோட்பாடு இன்றைய சமூக ஊடக ஆராய்ச்சியில் மிகவும் பொருத்தமானது, ஏனெனில் இது பயனர்கள் தங்கள் தேவைகளைப் பூர்த்திச் செய்வதற்காக செயலூக்கமுடன் ஊடக உள்ளடக்கத்தைத் தேர்ந்தெடுக்கும் போது எண்ணவாதத்தை வலியுறுத்துகிறது.

## ஆய்வுமுறை

### ஆராய்ச்சி வடிவமைப்பு

இந்த ஆய்வு இலக்கவியல் (Quantitative) ஆராய்ச்சி முறையைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளது. மலாயாப் பல்கலைக்கழக இந்திய ஆய்வியல் துறை மாணவர்களின் கற்றல் நடவடிக்கையில் சமூக ஊடகங்களின் விளைவுகளை அளவிடுவதற்கும் புள்ளியல் பகுப்பாய்வு மூலம் முடிவுகளை எடுப்பதற்கும் இம்முறை தேர்ந்தெடுக்கப்பட்டது. இந்த ஆய்வின் நோக்கம் மாணவர்களின் சமூக ஊடக பயன்பாட்டு நடத்தைகளையும் அதன் கல்வி விளைவுகளையும் அளவிடுவதாகும்.

### மாதிரி

இந்த ஆய்வின் மாதிரிக் குழு மலாயாப் பல்கலைக்கழகத்தின் இந்திய ஆய்வியல் துறையைச் சேர்ந்த 80 மாணவர்களை உள்ளடக்கியது. இந்த மாதிரியில் இளங்களைப் பயிலும் மாணவர்கள் அடங்குவர். மாணவர்கள் நான்கு கல்வி ஆண்டுகளிலிருந்தும் (முதல் ஆண்டு முதல் நான்காம் ஆண்டு வரை) தேர்ந்தெடுக்கப்பட்டனர். அனுபவங்கள் மற்றும் கல்விச் சூழலில் சமூக ஊடகத்திற்கான வெளிப்பாட்டின் பிரதிநிதித்துவ விநியோகத்தை உறுதிப்படுத்த, பாலினம் மற்றும் பயிலும் ஆண்டின் அடிப்படையில் மாணவர்களின் பன்முகத்தன்மையை அடைய இந்த மாதிரி அளவு ஆய்வின் நோக்கங்களை அடைவதற்கும் நம்பகமான முடிவுகளை பெறுவதற்கும் ஏற்றதாகக் கருதப்பட்டது.

### கருவிகள்

இந்த ஆய்வில் ஆங்கிலம் மற்றும் தமிழ் இரண்டிலும் தரவு சேகரிப்பிற்கு கட்டமைக்கப்பட்ட வினாநிரல் (Structured Questionnaire) மூலம் தரவுகள் சேகரிக்கப்பட்டன. இந்த ஆய்வுக்கான வினாநிரல் நான்கு முக்கிய பிரிவுகளாக வடிவமைக்கப்பட்டுள்ளது. முதல் பிரிவில் மாணவர்களின் அடிப்படை தகவல்கள் அடங்கியுள்ளன. இதில் வயது, பால், பயிலும் ஆண்டு போன்ற விவரங்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. இந்த தகவல்கள் ஆய்வின் பங்கேற்பாளர்களின் பண்புகளைப் புரிந்து கொள்வதற்கும், பகுப்பாய்வின் போது குழுவாக வகைப்படுத்துவதற்கும் பயன்படுத்தப்படுகின்றன. இரண்டாம் பிரிவில் மாணவர்களால் அதிகமாக பயன்படுத்தப்படும் சமூக ஊடகங்களை அடையாளம் காணுவதற்கான கேள்விகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த பிரிவில் பல்வேறு சமூக ஊடக தளங்களின் பயன்பாட்டு அளவு, பயன்பாட்டு நேரம், பொதுவாக பயன்படுத்தும் சமூக ஊடகத் தளங்கள் போன்ற விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன. மூன்றாம் பிரிவில் மாணவர்கள் சமூக ஊடகங்களை அணுகுவதற்கு கையாளும் முறைகள் பற்றிய கேள்விகள் உள்ளன. இதில் பயன்படுத்தும் சாதனங்கள், சமூக ஊடகங்களை அணுகும் நேரங்கள், பயன்பாட்டு முறைகள் போன்றவை ஆராயப்படுகின்றன. நான்காம் பிரிவு இந்த ஆய்வின் முக்கிய நோக்கமான சமூக ஊடகங்களின் கற்றல் நடவடிக்கையில் ஏற்படும் விளைவுகளை ஆராயும் கேள்விகளை உள்ளடக்கியுள்ளது. இந்த பிரிவில் பயன்பாடுகள் மற்றும் திருப்திகள் கோட்பாட்டின்

அடிப்படையில் அறிவாற்றல் தேவைகள், உணர்வுப்பூர்வ தேவைகள், தனிப்பட்ட ஒருங்கிணைப்பு தேவைகள், சமூக ஒருங்கிணைப்பு தேவைகள் மற்றும் பதற்றம்-இல்லாத தேவைகள் ஆகியவை மதிப்பிடப்படுகின்றன.

### தரவுப் பகுப்பாய்வு

ஜமோவி புள்ளியியல் மென்பொருளைப் பயன்படுத்தித் தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டன. சமூக ஊடகப் பயன்பாட்டு முறைகளை சுருக்கமாகக் கூற விவரணை புள்ளியியல் (அதிர்வெண்கள், சதவீதங்கள், சராசரிகள்) பயன்படுத்தப்பட்டது. இந்த மென்பொருள் முற்றிலும் இலவச சேவையை வழங்குவதால் மாணவர்களின் ஆய்விற்கு பெரிதும் பயனுள்ளதாக அமைகிறது.

இந்த மென்பொருள் '*descriptive statistics*', '*t-tests*', '*ANOVA*', '*ANCOVA*', '*MANCOVA*', '*linear and logistic regression*', '*exploratory and confirmatory factor analysis*' மற்றும் '*nonparametric tests*' போன்ற புள்ளியல் செயல்பாடுகளை வழங்குகிறது. இரு மாறிகளுக்கிடையே '*mean*', '*mode*', '*median*', '*range*' போன்ற துல்லியமான விவரங்களைப் பெறவும், '*t-test*' செயல்பாடு மூலம் ஆய்வின் கருதுகோள்களை சரிபார்க்கவும் இந்த மென்பொருள் பயன்பட்டது. பங்கேற்பாளர்கள் அளிக்கும் பதில்கள் புள்ளியல் ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்தவையா என்பதைத் தெளிவாக அறிந்துகொள்ள *Jamovi* உதவியது. வினாநிரல் மூலம் சேகரிக்கப்பட்ட தகவல்களைத் தரவுகளாக மாற்றுவதற்கும் வரைப்பட வடிவில் முடிவுகளை வழங்குவதற்கும் இந்த மென்பொருள் பயன்பாட்டு பெரிதும் உதவியது.

### முடிவுகள் (Results)

### சமூக ஊடகப் பயன்பாட்டு முறைகள்

புள்ளியியல் பகுப்பாய்வின் அடிப்படையில், புலனம் (92%) மற்றும் படவரி (75%) கல்வி தொடர்பான செயல்பாடுகளுக்கு மாணவர்களிடையே மிகவும் அதிகமாகப் பயன்படுத்தப்படும் தளங்கள் எனத் தெரியவந்தது. பெரும்பாலான மாணவர்கள் இந்தத் தளங்களை வகுப்பு விவாதங்கள், குழுப் பணிகள் மற்றும் கல்விப் பொருள்களை பரிமாறிக்கொள்வதற்காகப் பயன்படுத்துவதாக தெரிவித்தனர். வலையொளி (65%) விரிவுரைகள் மற்றும் பயிற்சிகளை அணுகவும் பயன்படுத்தப்பட்டது, அதே சமயம் முகநூல் (40%) பயன்பாடு குறைவதைக் காட்டியது.

மாணவர்கள் சமூக ஊடகத்தில் தினசரி 2 முதல் 4 மணி நேரம் செலவழிக்கின்றனர். குறிப்பாக, கல்வி தொடர்பான பணிகளில் மற்றும் தேர்வுத் தயாரிப்புகளின் போது சமூக ஊடகப் பயன்பாட்டின் அளவு அதிகரிக்கிறது. சமூக ஊடக பயன்பாட்டில் ஸ்மார்ட்போன் (89%) முதன்மையாகக் காணப்படுகின்றது, அதைத் தொடர்ந்து லேப்டாப் (47%) பயன்படுத்தப்படுகிறது.

### சமூக ஊடகப் பயன்பாட்டுக்கான உந்துதல்கள்

மாணவர்கள் கல்விக்காகச் சமூக ஊடகங்களை பயன்படுத்தப் பல காரணங்களை முன்வைத்தனர். அவை, சக மாணவர்களுடன் தொடர்பு மற்றும் ஒத்துழைப்பு (88%), கற்றல் வளங்கள் மற்றும் குறிப்புகளை விரைவாகப் பெறுதல் (81%), நேர மேலாண்மையை எளிதாக்கும் நெகிழ்வுத்தன்மை (76%) மற்றும் வகுப்புத் தகவல்களில் புதுப்பிப்புகளைப் பெறுதல் (64%) ஆகும். இந்த உந்துதல்கள் "பயன்பாடுகள் மற்றும் திருப்திகள் கோட்பாட்டின்" முக்கிய கூறுகளுடன், குறிப்பாகத் தகவல் தேடுதல் மற்றும் சமூகத் தொடர்பு போன்ற நோக்குகளுடன் ஒத்துப்போகின்றன.

### அறியப்பட்ட கல்வித் தாக்கங்கள்

சமூக ஊடகம் ஒழுங்கமைக்கப்பட்ட நிலையில் இருக்க உதவியது என்று பல மாணவர்கள் ஒப்புக்கொண்டபோதும், 61% மாணவர்கள் சமூக ஊடகங்கள் கல்வி கற்கும் நேரத்தில் கவனச்சிதறல்களை ஏற்படுத்தியது என்றும் ஒப்புக்கொண்டனர். மேலும், 53% மாணவர்கள் நேர நிர்வாகத்தில் சவால்களை எதிர்கொள்வதாகத் தெரிவித்தனர். இந்தக் குறைபாடுகள் இருந்தபோதிலும், 69% மாணவர்கள், பொறுப்புடன் சமூக ஊடகத் தளங்களைப் பயன்படுத்தும்போது, சமூக

ஊடகம் தங்களுடைய கற்றல் அனுபவத்தை மேம்படுத்தியது என்று நம்பிகின்றனர்.

புள்ளியியல் பகுப்பாய்வு சமூக ஊடகத்தின் கட்டமைக்கப்பட்ட பயன்பாட்டுக்கும் அறியப்பட்ட கல்வி மேம்பாட்டுக்கும் இடையே மிதமான நேர்மறைத் தொடர்பை காட்டியது. எனினும், கட்டமைக்கப்படாத, அதிகப்படியான பயன்பாடு நேர நிர்வாகம் மற்றும் கவனத்துடன் எதிர்மறை தொடர்பைக் கொண்டிருந்தது.

### பகுப்பாய்வு (Discussion)

இந்த ஆய்வின் முடிவுகள் பல்கலைக்கழக மாணவர்கள் சமூக ஊடகங்களைக் கல்வி நோக்கங்களுக்காக பெரிதும் பயன்படுத்துகிறார்கள் என்பதை உறுதிப்படுத்துகின்றன, முந்தைய ஆய்வுகளை ஒட்டியவாறு (Junco et al., 2011; Gikas & Grant, 2013), புலனம் மற்றும் படவரி மாணவர்களுக்குக் கல்வித் தொடர்பு, குழு வேலை ஒத்துழைப்பு மற்றும் கல்விச் சார்ந்த உள்ளடக்கத்தை அணுகுவதற்கான அத்தியாவசிய கருவிகளாக உருவாகியுள்ளன. இது பயன்பாடுகள் மற்றும் திருப்தி கோட்பாட்டுடன் ஒத்துப்போகிறது, ஏனெனில் மாணவர்கள் தங்களது கல்விச் தேவைகளைப் பூர்த்தி செய்யச் சமூக ஊடகங்களை நோக்கமுடன் பயன்படுத்துகிறார்கள்.

எனினும், இந்த ஆய்வு சமூக ஊடக பயன்பாட்டின் இரு முனைத் தன்மையையும் வெளிப்படுத்துகிறது. கட்டமைக்கப்பட்ட மற்றும் நோக்கமுள்ள ஈடுபாடு மேம்பட்ட கல்வி அனுபவங்களுக்கு வழிவகுக்கும் அதே நேரத்தில், கட்டுப்பாடற்ற மற்றும் அதிகப்படியான பயன்பாடு கவனச்சிதறல் மற்றும் நேர மேலாண்மைக்கு பங்களிக்கிறது. இந்த முடிவுகள் Chen & Bryer (2012) மற்றும் Manca & Ranieri (2016) ஆகியோரின் முந்தைய ஆராய்ச்சிக்கு ஒத்துப்போகின்றன, அவர்கள் சமூக ஊடகம் செயலற்ற முறையில் அல்லது கல்விக்கு அல்லாத காரணங்களுக்காக பயன்படுத்தப்படும் போது உற்பத்தித்திறனை தடுக்கலாம் என்று எச்சரிக்கின்றனர்.

மாணவர்கள் சமூக ஊடகங்களைப் பயன்படுத்தும் நோக்கங்களாகத் தகவல் பரிமாற்றம், ஒத்துழைப்பு, நெகிழ்வுத்தன்மை ஆகியவை காணப்படுகின்றன. இது கல்வியில் டிஜிட்டல் ஊடகங்கள் பலனளிக்கக்கூடிய சாதனங்கள் என்பதை உறுதிப்படுத்துகிறது. இருப்பினும், அதன் தாக்கங்களைச் சீரமைக்க கல்வியாளர்கள் மற்றும் நிறுவனங்கள் செயல்பட வேண்டும்.

### முடிவு மற்றும் பரிந்துரைகள்

இந்த ஆய்வு, சமூக ஊடகங்கள் மலாயாப் பல்கலைக்கழக இந்திய ஆய்வியல் துறை மாணவர்களின் கல்விச் செயல்பாடுகளில் முக்கிய பங்கு வகிக்கின்றன என்பதை உறுதிப்படுத்துகிறது. புலனம், படவரி மற்றும் வலையொளி போன்ற தளங்கள் தகவல்தொடர்பு, கூட்டுப் பணிகள், மற்றும் கல்வி வளங்களை பகிர்வதற்காகப் பரவலாகப் பயன்படுத்தப்படுகின்றன. இந்தக் கருவிகள் கல்வி ஈடுபாட்டை எளிதாக்குவதில் கணிசமான நன்மைகளை வழங்கினாலும், அவற்றின் தவறான பயன்பாடு கவனச்சிதறல்களுக்கும் பயனற்ற நேர மேலாண்மைக்கும் வழிவகுக்கும். கண்டுபிடிப்புகள் சமூக ஊடகத்தின் இரட்டைத் தாக்கத்தை வலுப்படுத்துகின்றன: அதன் கட்டமைக்கப்பட்டப் பயன்பாடு மாணவர்களிம் கல்வி ஈடுபாட்டை மேம்படுத்துகிறது,

### பரிந்துரைகள்

மாணவர்களின் கல்விச் செயல்திறனில் சமூக ஊடகங்கள் முக்கியப் பங்காற்றும் நிலையில், அதன் பயன்பாட்டைச் சீராகக் கொண்டு செல்லச் சில பரிந்துரைகள் வழங்கப்படுகின்றன. முதலில், கல்வியாளர்கள் சமூக ஊடகங்களை வகுப்பறைச் சூழலில் ஒருங்கிணைக்கலாம். குறிப்பாக, வகுப்புப் பணிகள், குழு விவாதங்கள் மற்றும் குறிப்புகள் பகிர்வுப் போன்ற செயல்பாடுகளுக்கு சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவது, மாணவர்களின் ஈடுபாட்டை அதிகரிக்கும். இதனுடன், பல்கலைக்கழகம் மற்றும் கல்வி நிறுவனங்கள், மாணவர்களுக்கு சமூக ஊடகங்களின் பொறுப்பான மற்றும் திறமையான பயன்பாட்டை கற்பிக்கும் டிஜிட்டல் எழுத்தறிவு பயிற்சி திட்டங்களை வழங்க வேண்டும்.

அதேபோல், சமூக ஊடகப் பயன்பாட்டுக்கானத் தெளிவான

வழிகாட்டுதல்களை பல்கலைக்கழகங்கள் உருவாக்கி நடைமுறைப்படுத்த வேண்டும். இது கட்டுப்பாடு விதிப்பதற்காக அல்ல, அதற்குப் பதிலாக சமநிலையான மற்றும் பயனுள்ள பயன்பாட்டை ஊக்குவிப்பதற்காக இருக்க வேண்டும். மாணவர்கள் சமூக ஊடகங்களை கல்விச் செயற்பாடுகளுக்கே பயன்படுத்திய போதிலும், நேர மேலாண்மை, கவனக் கட்டுப்பாடு போன்ற துறைகளிலும் விழிப்புணர்வுடன் செயல்பட வேண்டும். இதற்காகத், தனிப்பட்ட துறைகளில் சுய ஒழுக்கத்தை வளர்க்கும் பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும்.

மேலும், துணுக்காடல், தொலைவரி போன்ற புதிய மற்றும் வளர்ந்துவரும் சமூக ஊடக தளங்களில் மாணவர்கள் மேற்கொள்ளும் கல்வித் தொடர்பான செயல்பாடுகள் குறித்த ஆய்வுகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட வேண்டும். இது மாணவர்கள் இன்றைய டிஜிட்டல் சூழ்நிலையில் சமூக ஊடகங்களை எவ்வாறு பயன்படுத்துகிறார்கள் என்பதை ஆழமாகப் புரிந்துகொள்ள உதவும். இவ்வாறு செயல்பட்டால், சமூக ஊடகங்கள் ஒரு பயனுள்ள மற்றும் நோக்கமுள்ள கல்விக் கருவியாக மாற்றும் முயற்சிகளுக்கு வலுவான அடித்தளமாக மாறும்.

### முடிவுரை

இந்த ஆய்வு, சமூக ஊடகங்கள் மலாயா பல்கலைக்கழக இந்திய ஆய்வியல் துறை மாணவர்களின் கல்விச் சூழல்களில் மிகவும் முக்கியமான மற்றும் இரண்டு முகத்தன்மை கொண்ட கருவியாக செயல்படுகிறது என்பதை வெளிப்படுத்துகிறது. தகவல்களை விரைவாகப் பகிர்வது, ஒத்துழைப்பு வலையமைப்பை உருவாக்குவது, மற்றும் நெகிழ்வான கற்றலை ஆதரிப்பது போன்ற நன்மைகள், சமூக ஊடகங்களை ஒரு சக்திவாய்ந்த கருவியாக மாற்றுகின்றன. ஆனால், அதன் எதிர்மறையான விளைவுகளை உணர்த்தும் சிக்கல்களும் புறக்கணிக்க முடியாதவை.

எனவே, கல்விச் சூழலில் சமூக ஊடகங்களின் இடத்தைச் சரியான முறையில் வகுக்கத், துல்லியமான வழிகாட்டுதலும், கல்வியாளர்களின் திட்டமிட்ட அணுகுமுறையும், மாணவர்களின் பொறுப்புணர்வும் இன்றியமையாதவை. சமூக ஊடகங்களை மாணவர்கள் பயனுள்ள வகையில் பயன்படுத்தக் கற்றுக்கொள்வதற்கான நேரமிதமான திட்டமிடல், சுய ஒழுக்கம் மற்றும் மெய்ப்பித்த கல்வி ஆதரவுகள் தேவைப்படுகின்றன.

இவ்வாறு ஒருங்கிணைந்த முயற்சிகள் செயல்படுத்தப்பட்டால், சமூக ஊடகம் உயர் கல்வி துறையில் மாற்றத்தையும் முன்னேற்றத்தையும் உருவாக்கும் நவீனக் கல்வி ஊடகமாக திகழும். இது வெறும் தகவல்களை பரிமாறும் கருவியாக மட்டும் இல்லாமல், மாணவர்களின் சிந்தனை வளத்தையும் கற்றல் அனுபவத்தையும் செறிவூட்டும் ஓர் ஆழமான கல்வி ஊடகமாகவும் அமைகிறது.

## References


Chen, B., & Bryer, T. (2012). *Investigating instructional strategies for using social media in formal and informal learning*. The International Review of Research in Open and Distributed Learning.

Gikas, J., & Grant, M. M. (2013). *Mobile computing devices in higher education: Student perspectives on learning with cellphones, smartphones & social media*. The Internet and Higher Education.

Heyam, F. H. (2014). 'The impact of social networks on students' academic Performance', *International Journal of Engineering and Advanced Technology*. 3 (12).

Junco, R. (2012). *The relationship between frequency of Facebook use, participation in Facebook activities, and student engagement*. Computers & Education.

Junco, R., Heiberger, G., & Loken, E. (2011). 'The effect of Twitter on college student engagement and grades',

*Journal of Computer Assisted Learning*. 27(2):119 - 132

Kaplan, A. M., & Haenlein, M. (2010). *Users of the world, unite! The challenges and opportunities of social media*. Business Horizons.

Katz, E., Blumler, J. G., & Gurevitch, M. (1974). *Uses and gratifications research*. The Public Opinion Quarterly.

Kuh, G. D. (2001). 'Assessing what really matters to student learning: Inside the National Survey of Student Engagement', *The Magazine of Higher Learning*.

Manca, S., & Ranieri, M. (2016). *Facebook and the others: Potentials and obstacles of social media for teaching in higher education*. Computers & Education.

Ruggiero, T. E. (2000). *Uses and gratifications theory in the 21st century*. Mass Communication & Society.